இந்திய உச்சநீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண் 7292/2009

ஆர். தனசுந்தரி என்கிற ஆர். இராஜேஸ்வரி ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

ஏ.என். உமாகாந்த் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. தினேஷ் மகேஸ்வரி:

வழக்காளர்கள் வழக்கை திரும்பபெற அனுமதி கோரியபின்னர், மறுப்பாளர்கள் 3 முதல் 6 வரையிலானவர்கள் அவர்களை வழக்காளர்களாக வழக்கில் சேர்க்கக்கோரி செங்கற்பட்டு, மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தின் முன்பாக மு.வ.எண் 219/2004-இல் தாக்கல் செய்த விண்ணப்பத்தை அனுமதித்து, அந்நீதிமன்றம் வழங்கிய 07.07.2005-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவை உறுதிசெய்து, சென்னை உயர் நீதிமன்றத்தினால் உ.சீ.ம. எண் 10/2006-இல் வழங்கப்பட்ட 12.10.2006-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையை எதிர்த்து இம்மேல்முறையீடானது சிறப்பு அனுமதி மூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மறுப்பாளர்கள் 3 முதல் 6 வரையிலானவர்கள் தம்மை வழக்காளர்களாக இணைத்துக்கொள்ளக்கோரி, 1908-ஆம் ஆண்டைய உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் ஆணை 23-அ-உடன் ஆணை 1 விதி 10 ஆகியவற்றின்கீழ் தாக்கல் செய்த விண்ணப்பமானது, வழக்கின் கீழ்காணும் குறிப்பான பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது:-

(அ) வினாவிற்கிடமான இவ்வழக்கானது, முதலில் செங்கற்பட்டு, முதன்மை சார்பு நீதிமன்றத்தின் முன்பாக அடிப்படையில் வழக்காளரான ஏ.சி. நடராஜ முதலியார்

என்பவரால் 1-ஆம் மறுப்பாளரான ஏ.வி. மனோகர் மற்றும் 2 மற்றும் 3-ஆம் மறுப்பாளர்கள்/மேல்முறையீட்டாளர்களான ஆர். தனசுந்தரி என்கிற ஆர். ராஜேஸ்வரி ஆகியோருக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டு, அதில் 1-ஆம் மறுப்பாளரால் 2-ஆம் மறுப்பாளருக்காதரவாக நிறைவேற்றப்பட்ட 23.03.1985-ஆம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணத்தை முறிக்குமாறு கோரப்பட்டது. இவ்வழக்கானது துவக்கத்தில் மு.வ. எண் 122/1989-ஆக பதியப்பட்டது.

(ஆ) வழக்குரையின் விவரம் யாதெனில், சொத்தானது (சௌ இந்தியா என்ஜினியரிங் வொர்க்ஸ்) என்ற கூட்டாண்மையின் பெயரில் வாங்கப்பட்டது. அதில் வழக்காளரான ஏ.சி. நடராஜ முதலியாரும் மற்றும் மறுப்பாளர் 1-ஆன ஏ.வி. மனோகரனும் கூட்டாளிகளாவர். அக்கூட்டாண்மையானது 22.05.1971-ஆம் தேதியிடப்பட்ட முறிவு ஆவணத்தின் மூலம் கலைக்கப்பட்டது. அதன் விளைவாக 1-ஆம் மறுப்பாளரான மனோகரன், மேற்படி கூட்டாண்மையின் சொத்துகள் மற்றும் பொறுப்புகளிலிருந்து 1-ஆம் மறுப்பாளரான மனோகரன் விடுவிக்கப்பட்டு அவை வழக்காளரான ஏ.சி. நடராஜ முதலியாரிடம் ஒப்படைக்கப்பட்டன. ஏ.வி. மனோகரன் வழக்கு சொத்துகளின் உரிமையை விட்டுக்கொடுத்தபொழுதிலும், எதிர்ப்பிற்குள்ளான 23.03.1985-ஆம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் அதனை 2-ஆம் மறுப்பாளருக்கு விற்றுவிட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

(இ) இவ்வழக்கின் நிலுவையின்பொழுது, வழக்காளரான ஏ.சி. நடராஜ முதலியார் 19.05.1988 அன்று தன்னுடைய 3 மகன்கள் மற்றும் 4 மகள்கள் ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அவருடைய வாரிசுகள் 2 முதல் 8 வரையிலான வழக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். 5-ஆம் வழக்காளரும் இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருமான அவருடைய மகன் உமாகாந்திற்கு அவருடைய உடன் பிறந்தவர்களால் அதிகாரமளிக்கப்பட்டது.

(ஈ) வழக்கானது, 1995-ஆம் ஆண்டு மறுப்பாளர் வரா வழக்கை தீர்ப்பளிக்கப்பட்டு, பின்னர், அது முந்தைய நிலைக்கு உயிர்ப்பிக்கப்பட்டது. எனினும், இடைப்பட்ட காலத்தில், முதன்மை வழக்காளரின் அனைத்து வாரிசுகளின்

அதிகார முகவரும் 5-ஆம் வழக்காளரும் இங்குள்ள 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருமான உமாகாந்த் இங்குள்ள 2 முதல் 4 வரையிலான எதிர்மேல்முறையீட்டாளர்களான ராமசாமி, தனம் ராமசாமி மற்றும் வெங்கடசுப்ரமணியன் ஆகியோர்களுக்கு 04.07.1995-ஆம் தேதியிடப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் வழக்கு சொத்துகளை விற்றுவிட்டார். இப்பரிவர்த்தனையின் அடிப்படையிலும் மற்றும் வழக்கானது உயிர்ப்பிக்கப்பட்டதை அடுத்தும், வழக்குச் சொத்துகளை வாங்கியவர்கள் அவர்களை வழக்காளர்களாக சேர்க்கக்கோரி (வ.வி. எண் 135/2002)-ஐ தாக்கல் செய்தனர். இவ்விண்ணப்பமானது 21.06.2002 அன்று அனுமதிக்கப்பட்டு, அதன்மூலம் மேற்படி கிரையம் பெற்றவர்கள் வழக்காளர்கள் 9 முதல் 11 வரையிலானவர்களாக சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப் பட்டனர்.

(உ) எனினும், வழக்காளர்கள் 2 முதல் 4 மற்றும் 6 முதல் 8 வரையிலானவர்கள், மேற்படி கிரைய பரிவர்த்தனைக்கு விதிவிலக்காகி, 5-ஆம் வழக்காளருக்கு அளித்த அதிகாரத்தை முறித்துவிட்டு, 5-ஆம் வழக்காளரையும் மற்றும் கிரையம் பெற்ற 9 முதல் 11 வரையிலான வழக்காளர்களையும் மறுப்பாளர்கள் வரிசையில் சேர்க்கக்கோரி (வ.வி. எண் 468/2003)-ஐ தாக்கல் செய்தனர். இவ்விண்ணப்பமானது 25.06.2003 அன்று அனுமதிக்கப்பட்டு அதற்கிணங்க 5-ஆம் வழக்காளரும் மற்றும் 9 முதல் 11 வரையிலானவர்களும் இவ்வழக்கின் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களாக சேர்க்கப்பட்டனர்.

(ஊ) இவ்வாறாக 1-ஆம் மறுப்பாளரால் 2-ஆம் மறுப்பாளருக்காதரவாக நிறைவேற்றப்பட்ட கிரைய ஆவணத்தை முறிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட உரிமையியல் வழக்கில், முதன்மை வழக்காளர் இறந்துவிட அவருடைய வாரிசுகள் 2 முதல் 8 வரையிலான வழக்காளர்களாக சேர்க்கப்பட 5-ஆம் வழக்காளரின் உடன்பிறந்த பிற வழக்காளர்கள் அவருக்கு அதிகாரமளிக்க 2002-ஆம் ஆண்டில் வழக்கானது மறுப்பாளர்கள் வரா வழக்காக இடைப்பட்ட காலத்தில் 5-ஆம் வழக்காளர் மூன்று நபர்களுக்கு வழக்கு சொத்துகளை விற்க, பிற வழக்காளர் அவருக்களித்த அதிகாரத்தை முறித்துவிட்டு அவரையும் கிரையம் பெற்ற 9 முதல் 11 வரையிலான வழக்காளர்களையும் மறுப்பாளர்கள் வரிசையில் சேர்க்கக்கோர, அவ்விண்ணப்பமானது

அனுமதிக்கப்பட்டு, 5-ஆம் வழக்காளரும் மற்றும் 9 முதல் 11 வரையிலான வழக்காளர்களும் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களாக சேர்க்கப்பட்டனர். இத்தகைய இயல்நிலை மாற்றமான இத்தருணத்தில், வழக்கானது செங்கற்பட்டு மாவட்ட முதல்நிலை உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, அவ்வழக்கானது, மு.வ. எண் 219/2004-ஆக எண்ணிடப்பட்டது.

(எ) வழக்கானது, வழக்காளர்கள் மற்றும் மறுப்பாளர்கள் வரிசையானது மாற்றப்பட்டு, நீதமன்றமும் மாற்றப்பட்டு, வழக்கிற்கு மறு எண்ணிடப்பட்ட பின்னர், வினாவிற்கிடமான வழக்கானது விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வழக்கானது, மூன்றாம் மறுப்பாளர் தரப்பு சாட்சிய விசாரரணையை அடைந்தபொழுது, வழக்கானது நீதிமன்றத்திற்கு வெளியே 1 மற்றும் 2 ஆகிய மறுப்பாளர்களுடன் தீர்த்துக் கொள்ளப்பட்டது என்ற காரணத்தின் அடிப்படையில் வழக்கை திரும்பபெற வழக்காளர்கள் நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரினார். 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்கள் ஆட்சேபிக்காதப்பொழுதிலும், முன்பு வழக்காளர்களாக இருந்து, மறுப்பாளர்களாக மாற்றப்பட்ட 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள் அதனை எதிர்த்ததோடு, அவர்களை இவ்வழக்கின் 2 முதல் 5 வரையிலான வழக்காளர்களாக சேர்க்கக்கோரி வ.வி. எண் 153/2005-ஐ தாக்கல் செய்தனர்.

3. அந்த (வ.வி. எண் 153/2005) விசாரணை நீதிமன்றத்தினால் 07.07.2005-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் கீழ்காணும் கருத்துகளுடன் அனுமதிக்கப்பட்டது:-

> "மனு மற்றும் எதிருரையை வாசித்ததில், முதன்மை வழக்கானது, 1989-ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்டது என தெரியவருகிறது. முதலில் மனுதாரர் வழக்காளர்களின் அதிகார முகவராக வழக்கை தாக்கல் செய்துள்ளார். அதிகாரமானது நடைமுறையில் இருந்தபொழுது, மனுதாரருக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரமானது முறிக்கப்பட்டது. அதிகாரம் நடைமுறையில் இருந்தபொழுது, மனுதாரர் வழக்கு சொத்துகளின் பெரும்பான்மையானவற்றை விற்றுவிட்டார். கிரையம் பெற்றபர்கள் வழக்கில் தன்மை வழக்காளர்களாக சேர்க்கக்கோரி

விண்ணப்பிக்க அது அனுமதிக்கப்பட்டது. பின்னர், வழக்காளர்கள் 5, 9 முதல் 11 வரையிலானவர்களை மறுப்பாளர்களாக சேர்க்கக்கோரி வழக்காளர்களால் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பமானது அனுமதிக்கப் பட்டது. பின்னர் விசாரணை துவங்கி வழக்காளர்கள் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 3-ஆம் மறுப்பாளர் தரப்பு சாட்சியம் விசாரிக்கப்பட்டது. 2-ஆம் மறுப்பாளரின் கணவரின் சாட்சியமானது நிறுத்திவைக்கப்பட்டது. இக்கட்டத்தில் வழக்காளரும் 2-ஆம் மறுப்பாளரும் சமரசம் செய்துகொண்டு வழக்கானது, நீதிமன்றத்திற்கு வெளியே தீர்க்கப்பட்டுவிட்டதால், வழக்கை திரும்பப்பெற அனுமதிக்கவேண்டும் என கோரிக்கை மனு தாக்கல் செய்தனர். அதிகாரமானது நடைமுறையில் இருந்தபொழுது, மனுதாரர் வழக்கு சொத்துகளை விற்றார். எனவே, வழக்கின் முடிவில் மனுதாரர் அக்கறைக் கொண்டுள்ளார். வழக்கானது, கடைநிலையில் இருக்கும் பொழுதும் மற்றும் வழக்கானது 1989-ஆம் ஆண்டைய வழக்கானதாலும், வழக்கானது திரும்பப்பெற அனுமதிக்கப்படுமானால், மனுதாரருக்கு தீர்வேதுமில்லை மற்றும் இவ்வழக்கில் அவருக்கு எப்பரிகாரமும் கிடைக்காது. மேலும், மனுதாரர்கள், புதிதாக வழக்கைத் தாக்கல் செய்வார்களானால், அவ்வழக்கானது காலவரையறைச் சட்டத்தினால் தடைசெய்யப்படும். வழக்கின் அனைத்து தரப்பினர்களும் சமரசம் செய்துகொண்டபொழுது, வழக்கை திரும்பப்பெற நீதிமன்றம் தரப்பினர்களை அனுமதிக்கும். ஆனால், இவ்வழக்கில் வழக்காளரும் மற்றும் 2-ஆம் மறுப்பாளரும் மட்டுமே சமரசம் செய்துகொண்டுள்ளனர். எஞ்சிய மறுப்பாளர்கள், சமரசத்தில் தரப்பினர்களல்ல மற்ற மறுப்பாளர்களுடன் இந்நீதிமன்றம் ஏற்காது.

மேற்கூறிய காரணங்களுக்காகவும், நீதியின் நலனிற்காகவும் வழக்கை முற்றிலுமாக தீர்க்கவும் மற்றும் தரப்பினர்களின் உரிமைகளை முடிவு செய்யவும். இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது."

4. மேற்படி உத்தரவினால் பாதிப்படைந்து, 2-ஆம் மறுப்பாளரும் மற்றும் இங்குள்ள மேல்முறையீட்டாளருமானவர், உயர் நீதிமன்றத்தின் முன்பாக சீராய்வு மனுவைத் தாக்கல்

செய்ய, அதனை பரிசீலித்து, 12.10.2006-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின் மூலம் தள்ளுபடி செய்து கீழ்க்காணுமாறு கருத்து தெரிவித்தது:-

"15. ..... இவ்வழக்கில் தங்களை வழக்காளர்களாக சேர்க்கவும் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள் ஏற்கனவே இவ்வழக்கின் 5 மற்றும் 9 முதல் 11 வரையிலான வழக்காளர்களாக சேர்க்கப்பட்டிருந்தவர்கள் என்பதும், தற்பொழுது 3-ஆம் மறுப்பாளரானவர். தம்முடைய சொந்த சகோதரர்கள் மற்றும் சகோதரிகள் ஆகியோரின் நலனிற்கெதிராக செயல்பட்டு, வழக்குச் சொத்துகளை 4 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களுக்கு விற்றுவிட்டார் என்ற காரணத்தின் அடிப்படையில், இவ்வழக்காளர்கள் வ.வி. எண் 468/2003-இன் மூலம் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களாக மாற்றப்பட்டனர் என்பதும், வேறு சொற்களில் கூறுவதனால், 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள் வழக்கு நிலுவையிலுள்ளபொழுதே சொத்துகளை கிரையம் பெற்றவர்கள் என்பதும் அவர்கள் 5 மற்றும் 9 முதல் 11 வரையிலான வழக்காளர்களாக இருந்தபொழுது 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிராக வழக்குரைத்தனர் என்பதும், அவர்கள் 2003-ஆம் ஆண்டில் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களாக சேர்க்கப்பட்டதன் அடிப்படையில் 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிராக முடிவு செய்யப்படவேண்டிய உரிமையை அவர்கள் இழந்துவிட்டதாக கூறமுடியாதென்பதும், உண்மையில் 3-ஆம் மறுப்பாளர் வழக்காளராக வழக்குரைக்கும் உரிமையானது விலகியது என்றாலும், அவர் 2003-ஆம் ஆண்டில் 3-ஆம் மறுப்பாளராக சேர்க்கப்-பட்டதாலேயே, கிரைய ஆவணத்திற்கெதிராக அவருடைய தந்தையார் தொடுத்த வழக்கின் உரிமையானது அவருக்கில்லாததாகிவிடாது.

16. வழக்காளர்கள் வழக்கை நடத்தி வெல்வார்களானால், அத்தகைய வெற்றியானது, தாமாகவே 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களுக்கு நன்மை பயத்திருக்கும். எனவே, 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள் வழக்காளர்களுடன் ஒத்த நலனை கொண்டிருந்தனர்.

17. அத்தகைய சூழ்நிலைகளில் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களை, வழக்காளர்களாக விசாரணை நீதிமன்றம் உத்தரவிட்டது சரியானதே என நான் கருதுகிறேன். எனவே, உரிமையியல் சீராய்வில் தகுதிக்கூறு எதையும் நான் காணவில்லை. சீராய்வு மனுவானது தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை ஏதுமில்லை. தொடர்புடைய பல்வகை மனுக்கள் அனைத்தும் முடிக்கப்படுகின்றன."

5. மேற்படி உத்தரவை எதிர்த்து, 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள் தொடர்பான பரிவர்த்தனையானது, வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னரே நிகழ்ந்துள்ளது. இம்மறுப்பாளருக்கு 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிராக வழக்கு மூலம் ஏதுமில்லை. எனவே, அவர்கள் வழக்காளர்களாக சேர்க்கப்படமுடியாது. வழக்கை உ.வி.மு.ச. ஆணை 23 விதி 1-இன் கீழ் திரும்ப பெறுவதற்கான வழக்காளர்களின் உரிமையானது அகற்றப்படமுடியாது. குறிப்பாக, அவர்கள் புதிதாக வழக்கைத் தாக்கல் செய்வதற்கான சுதந்திரம் கோராதபொழுது, மேல்முறையீட்டாளருக்காதரவாக 1985-ஆம் ஆண்டில் கிரையமானது நிறைவேற்றப்பட்டதையடுத்து, பின்னர் கிரையம் பெற்றவர்கள் 1985-ஆம் ஆண்டைய கிரையத்தை முறிக்குமாறு கோர, சட்டப்படியான உரிமையேதும் பெற்றிருக்கவில்லை என மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் ஊக்கத்துடன் வாதிட்டார். வழக்கிற்கு பின்பு கிரையம் பெற்றவர்கள் தனிப்பட்ட மற்றும் வேறுபட்ட வழக்கு மூலம் கொண்டுள்ளனர். அவர்கள் தனியாக வழக்கு தொடரவேண்டும் மற்றும் அவர்கள் வழக்காளர்களாக சேர்க்கப்படும் உரிமை கொண்டவர்களல்ல என்ற வாதங்களுடன் 6 மற்றும் 8 முதல் 11 வரையிலான எதிர்மேல்முறையீட்டாளர்கள் (வழக்காளர்கள்) தரப்பில் மேல்முறையீட்டாளரின் வாதங்கள் ஆதரிக்கப்பட்டன.

6. அதற்கு முன்பாக, 1-ஆம் மறுப்பாளரால் 2-ஆம் மறுப்பாளருக்காதரவாக நிறைவேற்றப்பட்ட கிரைய ஆவணத்தை முறிப்பதில், 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள் வழக்காளர்களோடு ஒத்த அக்கரையுடையவர்கள்" என்னும் வாதத்துடன், வழக்கின் சாரம் மற்றும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் நிகழ்ந்த நிகழ்வுகள் ஆகியவற்றை குறித்து, முரன்பட்ட உத்தரவை 1-ஆம் எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் ஆதரித்தார். எனவே, கற்றறிந்த வழக்குரைஞரின் கூற்றின்படி,

தற்பொழுதைய வழக்காளர்கள் வழக்கை திரும்பப்பெற கோரும்பொழுது, வழக்குச் சொத்து தொடர்பாக 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிராக 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள் தங்கள் உரிமைக்கான தீர்ப்புக்கோரும்பொருட்டு, அவர்கள் வழக்காளர்களாக சேர்க்கப்படும் உரிமையுடையவர்கள்.

7. இருதரப்பு வாதங்களையும் ஆர்வத்துடன் கேட்டும் மற்றும் பொருத்தமான சட்டம் தொடர்பாக ஆவணத்தை ஆராய்ந்தும், தற்பொழுதைய வழக்காளர்கள் வழக்கைத் திரும்பப்பெற அனுமதியை கோரியதையடுத்து இவ்வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின் அடிப்படையில் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள் சரியாகவே ஆணை 23 விதி அ-உடன் உ.வி.மு.ச., ஆணை 1 விதி 10-இன் கீழ் வழக்காளர்களாகி, ஆதியில் 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உரிமையானது கோரப்பட்டதுபோன்றே, வழக்கைத் தொடர அனுமதிக்கப்பட்டுள்ளதென நாங்கள் தெளிவாக கருதுகிறோம்.

8. உரிமையியல் வழக்கின் தரப்பினர்கள் தொடர்பான நடைமுறை விதியானது ஆணை 1-இல் அவசியம் கொண்டுள்ளது, அது தரப்பினர்களை சேர்த்தல், சேர்க்காமை மற்றும் தவறான தரப்பினர்களை சேர்த்தல் போன்றவை குறித்து பல்வேறு கோணங்களில் கையாளுகிறது. ஆணை 1 விதி 10 குறிப்பாக தரப்பினர்களை சேர்த்தல், நீக்குதல் மற்றும் மாற்றுதல் தொடர்பாக கையாளுகிறது. ஒரு தரப்பினர், வேறு தரப்பினராக மாறுவதற்கான விதியானது, ஆணை 1 விதி 10 துணைவிதி 2-இல் உள்ளது. அது பின்வருமாறு தெரிவிக்கிறது:-

> "(2). **நீதிமன்றமானது, தரப்பினர்களை நீக்கலாம் அல்லது சேர்க்கலாம்** - நீதிமன்றமானது, வழக்கின் எக்கட்டத்திலும், ஏதேனும் தரப்பினரின் விண்ணப்பத்தின் அடிப்படையிலோ அல்லது விண்ணப்பமின்றியோ, நீதிமன்றத்திற்கு நியாயமெனத்தோன்றும் நிபந்தனையின் அடிப்படையில் வழக்காளராகவோ அல்லது மறுப்பாளராகவோ முறையின்றி சேர்க்கப்பட்டுள்ள தரப்பினரின் பெயரானது நீக்கப்பட உத்தரவிடலாம் அல்லது வழக்கில் தொடர்புடைய வினாவை தீர்ப்பதற்கு பிரச்சினையை முடிப்பதற்கு நீதிமன்றத்தின் முன்பாக முன்னிலையாகவேண்டும் என

நீதிமன்றம் எண்ணும் நபரை அல்லது வழக்காளராகவோ அல்லது மறுப்பாளராகவோ சேர்க்கப்படவேண்டிய நபரை சேர்க்கவும் நீதிமன்றம் உத்தரவிடலாம்."

8.1. மறுபுறத்தில் வழக்கை திரும்பப்பெறுதல் அல்லது சரிபடுத்திக்கொள்ளுதல் தொடர்பான சட்ட விதியானது, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டத்தின் ஆணை 23-இல் உள்ளது. அதன் விதி 1-இன்படி, ஒரு வழக்கைத் திரும்பப்பெறவோ அல்லது கோரிக்கையின் ஒரு பகுதியை விட்டுக்கொடுக்கவோ வழக்காளர் அனுமதி கோரலாம். திருத்தச்சட்டம் 104/1976-இன் மூலம் சேர்க்கப்பட்ட விதி 1-அ-ஆனது வழக்காள் வழக்கை திரும்பப்பெறும் அல்லது கோரிக்கையின் ஒரு பகுதியை விட்டுக்கொடுக்கும் நிகழ்வில் வழக்காளரைச் சார்ந்து நின்ற மறுப்பாளர், அதன் மறுப்பாளருக்காக ஏதேனும் வினாவானது முடிவு செய்யப்படவேண்டிய உரிமையை கொண்டிருப்பாரானால், அது குறிப்பிட்டு கையாளுகிறது. உ.வி.மு.ச. ஆணை 23 விதி 1-அ பின்வருமாறு தெரிவிக்கிறது:-

"**வி.1-அ மறுப்பாளர்கள், வழக்காளர்களாக மாற்றப்பெறுவது எப்பொழுது அனுமதிக்கப்படுகிறது** - வழக்காளர் வழக்கைத் திரும்பப்பெறவோ அல்லது கோரிக்கையின் ஒரு பகுதியை விட்டுக்கொடுக்கவோ அனுமதிகோரி, விதி 1-இன் கீழ் விண்ணப்பித்து, மறுப்பாளர் தன்னை வழக்காளராக சேர்க்கக்கோரி ஆணை 1, விதி 10-இன் கீழ் விண்ணப்பிக்குமிடத்து, நீதிமன்றமானது, அத்தகைய விண்ணப்பத்தை பரிசீலிப்பதில், பிற மறுப்பாளர்களுக்கெதிராக முடிவு செய்யப்படவேண்டிய உரிமை எதையும் மறுப்பாளர் கொண்டுள்ளாரா என்பதைத் தீர்மானிக்க முறையான பொறுப்பை கொண்டுள்ளது."

9. ஆணை 1 விதி 10-இன் நோக்கமானது, வழக்கின் தரப்பினர்களின் முன்னிலையில் தகராறானது தீர்க்கப்படுவதற்காகவும் மற்றும் பல வழக்குகள் தவிர்க்கப்படுவதற்காகவும் வழக்கின் சாரம் தொடர்பாக தகராறுக்குரிய தரப்பினர்கள் அனைவரையும் அவசியம் கோப்பிற்கு கொண்டுவருவது வழக்கமாக இருந்துவருகிறது.

எனினும், நீதிமன்றமானது, வெவ்வேறு தீர்ப்புகளில் கொள்கைகளை விளக்கிய-பொழுதிலும், **அணில்குமார் சிங் -எதிர்- ஷிவ்நாத் மிஸ்ரா** : *(1995) 3* **எஸ்.சி.சி.** *147* என்ற வழக்கில் கீழ்க்காணுமாறு விளக்கியது:-

> *"7. ..... விதி 10-இன் நோக்கமானது, வழக்கின் தரப்பினர்களின் முன்னிலையில் தகராறானது தீர்க்கப்படவும் அதே நேரத்தில் காலதாமதமின்றியும் மற்றும் குறைபாடின்றியும் பல வழக்குகள் தவிர்க்கப்படவும் வழக்கின் சாரம் தொடர்பாக தகராறுக்குரிய தரப்பினர்கள் அனைவரையும் அவசியம் கோப்பிற்கு கொண்டுவருவதாகும்."*

10. விதி *1-அ-*இன்படி அதேபிரிவில் உள்ளபொழுதிலும், வழக்களார் வழக்கை திரும்பப்பெறும் அல்லது கோரிக்கையின் ஒரு பகுதியை விட்டுக்கொடுக்கும் நிகழ்வின்பொழுது, அவரை சார்ந்த மறுப்பாளர் உடன் மறுப்பாளருக்கெதிராக பிரச்சினை தீர்க்கப்படவேண்டிய உரிமையுடையவர். அதே வழக்கிலேயே உடன் மறுப்பாளருக்கெதிராக தீர்க்கப்படவேண்டிய பிரச்சினையை தீர்ப்பதற்காக தான் வழக்காளராக சேர்க்கப்படும் உரிமையுள்ளவராவார். இத்தன்மையானது விதி *1-அ-*இல் உள்ளபொழுதிலும், தரப்பினர்களை மாற்றிசேர்ப்பதற்கான வேண்டுரையை அனுமதிக்கும் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மறந்தவை. அவற்றை வழக்கில் முரண்பட்ட பிரச்சினையை ஆக்கப்பூர்வமாகவும் மற்றும் உணர்வுபூர்வமாகவும் தீர்க்க உத்தரவிடப்படும் என்பதில் ஐயத்திற்கிடம் வைக்கவில்லை. விதி *1-அ-*இன் அதிகாரத்தை பயன்படுத்துவதற்கான அடிப்படை தேவையானது, வழக்காளர் ஆணை *23*, விதி *1-*இன் கீழ் வழக்கைத் திரும்பப்பெறவோ அல்லது கோரிக்கையின் ஒரு பகுதியை கைவிடவோ அனுமதிகோர தன்னை வழக்காளராக மாற்றக்கோரும் மறுப்பாளர், உடன் மறுப்பாளருக்கெதிராக தீர்க்கப்படவேண்டிய உரிமை பெற்றிருப்பாரானால், அது ஆய்வு செய்யப்படவேண்டும். அத்தகைய சூழ்நிலையில் முந்தைய சார்பு மறுப்பாளர் அவருடைய உரிமையானது முறியடிக்கப்படுவதை தடுத்தும் மற்றும் தேவையின்றி பல்வழக்குகள் பெருகுவதைத் தெளிவுபடுத்தியும் மறுப்பாளர், வழக்காளராக வழக்கைத் தொடர அனுமதிக்கப்பட வேண்டும்.

11. தற்பொழுதைய ஒன்று, உ.வி.மு.ச. ஆணை 23 விதி 1 உடன் ஆணை 1 விதி 10 ஆகியவற்றின் பொருத்தத்திற்கு பதிலளிக்கக்கூடிய ஒரு தெளிவான வழக்காகும். நாம் கவனித்ததுபோன்று, வழக்கின் முதன்மைக் காரணம், வழக்காளர் வழக்குச் சொத்தில் தன்னுடைய உரிமையை உறுதிசெய்து 1-ஆம் மறுப்பாளர், 2-ஆம் மறுப்பாளருக்கு வழக்குச் சொத்தை விற்றதை எதிர்த்துரைப்பதாகும். உண்மையான வழக்காளரின் மரணத்திற்குப் பின்னர், அனைத்து வழக்காளர்களின் அதிகார முகவரான 5-ஆம் வழக்காளர் உட்பட, உண்மையான வழக்காளரின் மகன்கள் மற்றும் மகள்கள் ஆகியோர் 2 முதல் 8 வரையிலான வழக்காளர்களாக வழக்கில் சேர்க்கப்பட்டனர். வழக்கானது, எதிர்வழக்காளர் <u>வாரா</u> வழக்காக தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர், 5-ஆம் வழக்காளர் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களும் பின்னர் 9 முதல் 11 வரையிலான வழக்காளர்களாகச் சேர்க்கப்பட்டவர்களுக்கு வினாவிற்கிடமான சொத்தை விற்றார். பின்னர், எதிர்வழக்காளர் வாரா உத்தரவானது நீக்கறவு செய்யப்பட்டு, வழக்கானது உயிர்ப்பிக்கப்பட்ட பின்னர் மேற்படி கிரையம்பெற்றவர்கள் 9 முதல் 11 வரையிலான வழக்காளர்களாக சேர்க்கப்பட்டனர். தரப்பினர்களின் தகுதியில் பின்னர் 5-ஆம் வழக்காளரும் மற்றும் 9 முதல் 11 வரையிலான வழக்காளர்களும் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களாக மாற்றப்பட்டபொழுதிலும் 1-ஆம் மறுப்பாளரால் 2-ஆம் மறுப்பாளருக்காதரவாக கிரையம் நிறைவேற்றப்பட்டதைப் பொருத்தவரையில், அவ்வழக்கானது 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிராகவே இருந்தது. இக்காரணம் தொடர்பாக 5-ஆம் வழக்காளரும் மற்றும் 9 முதல் 11 வரையிலான வழக்காளர்களும் 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களாக மாற்றப்பட்டபொழுதிலும், 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிரான அவர்களுடைய கோரிக்கையானது முடிவிற்கு வரவில்லை. 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிரான வழக்காளர்களின் நலனைப்போன்றே, ஒத்த நலனை 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள் 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கு எதிராக கொண்டுள்ளனர்.

12. தரப்பினர்களின் தகுதியிலும் மற்றும் வழக்கு சாரத்திலும் வழக்காளர்கள் 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுடன் ஏற்பாடு செய்துகொண்டு, வழக்கைத் திரும்பப்பெற உ.வி.மு.ச. ஆணை 23, விதி 1-இன் கீழ் நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரும்பொழுது 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிரான தம்முடைய கோரிக்கையுடன் வழக்கை தொடர்வதற்கான 3 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களின்

உரிமையானது உந்தப்பெற்று, அவர்கள் உ.வி.மு.ச. ஆணை 23, விதி 1-அ-இன் கீழ் வழக்காளர்களாக மாற்றப்பெறும் அறுகதையுடையவர்களாகின்றனர் என்பது தெளிவாகிறது.

13. பின்னர் கிரையம் பெற்றவர்களின் (4 முதல் 6 வரையிலான மறுப்பாளர்கள்) உரிமைகள் தொடர்பாக சில வினாக்கள் முடிவுசெய்யப்பட எழுப்பப்படுமானாலும் 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கெதிராக வழக்கை தொடர்வதான 3-ஆம் மறுப்பாளரின் உரிமையானது, உண்மையான வழக்காளரின் வாரிசுகளுள் ஒருவர் என்கின்ற அடிப்படையில் இன்னமும் உள்ளது. 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்கிடையிலான கிரையத்தை எதிர்க்கும் முன்பு 5-ஆம் வழக்காளரும் தற்பொழுது 3-ஆம் மறுப்பாளருமானவரின் உரிமையானது அவர் முன்பு 3-ஆம் மறுப்பாளராக்கப்பட்டதாலேயே இல்லாமலாகிவிடாது மற்றும் வழக்காளர்களுக்கும் 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்களுக்குமிடையிலான ஏற்பாடானது அவரை கட்டுப்படுத்துவதாக கருதமுடியாது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இச்சூழ்நிலைகளில் மறுப்பாளர்கள் தம்மை வழக்காளர்களாக சேர்க்கக்கோரும் வேண்டுரையை அனுமதித்ததில் விசாரணை நீதிமன்றமானது நியாயப்படுத்தப்படுகிறது மற்றும் உயர் நீதிமன்றமும் குறுக்கிட சரியாகவே மறுத்துள்ளது

14. மேலே என்ன விவாதிக்கப்பட்டவாறு, இம்மேல்முறையீடு தோல்வியுறுகிறது மற்றும் அது தள்ளுபடி செய்யப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் திரு. உதய் உமேஷ் லலித்

மாண்புமிகு நீதியரசர் திரு. தினேஷ் மகேஸ்வரி

புது டெல்லி,
06.03.2019.

உரிமைத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."